# கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 62 - குடியியற் கல்வி I, II

## இறுதிப்புள்ளிகளைக் கணித்தல்

### வினாப்பத்திரம் I

வினாப்பத்திரம் I - 1 x 40 = 40 புள்ளிகள்

### வினாப்பத்திரம் II

முதலாம் வினா மற்றும் ஏனைய நான்கு வினாக்கள் உள்ளிட்ட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

இறுதிப் புள்ளி வழங்கல்.

| | | |
|---|---|---|
| பகுதி II | 1 ஆம் வினா 02 x 10 | 20 புள்ளிகள் |
| | 2 ஆம் வினா 10 | |
| | 3 ஆம் வினா 10 | |
| | 4 ஆம் வினா 10 | 04 வினாக்களிற்கு 10 x 04 = 40 புள்ளிகள் |
| | 5 ஆம் வினா 10 | |
| | 6 ஆம் வினா 10 | |
| | 7 ஆம் வினா 10 | |

**வினாப்பத்திரம் I - 40 புள்ளிகள்**

**வினாப்பத்திரம் II - 60 புள்ளிகள்**

**மொத்தம் - 100 புள்ளிகள்**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2020

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாக பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரிசோதகர் புள்ளிகளைச் சரிபார்ப்பதற்கு நீல அல்லது கறுப்பு நிறமைப் பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..............................................................................
..............................................................................  ✓  △ 4/5
..............................................................................

(ii) ..............................................................................
..............................................................................  ✓  △ 3/5
..............................................................................

(iii) ..............................................................................
..............................................................................  ✓  △ 3/5
..............................................................................

**மொத்தம்** ⟶ □ 10/15

**பல்தேர்வு விடைத்தாள்**

**1. துளைத்தாள் தயாரித்தல்**

I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

II அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

III துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

IV சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

V **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை × அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும்போது ஓவலண்ட் கடதாசியின் வலது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதவும்.

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் மாத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப் பட்டியலை தயார் செய்யும்போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும்.

V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

VI. 21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு :**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளி பட்டியலில் பதியப்படுதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்து உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப் பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

ooo


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Department of Examinations - Sri Lanka

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2020
# 62 - குடியியற் கல்வி

**முதலாம் வினாப்பத்திரத்தின் நோக்கங்கள்**

- பாடத்தின் அனைத்து அலகுகளும் உள்ளடங்கும் வண்ணம் குறிப்பான விடயங்கள் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்

- ஜனநாயக ஆட்சிமுறையின் முக்கியத்துவம், அதிகாரப் பகிர்வு மற்றும் பரவலாக்கத்தின் முக்கியத்துவம் தொடர்பான அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்.

- பல்பண்பாட்டுச் சமூகம் ஒன்றில் வாழும் பிரஜைகள் கொண்டிருக்க வேண்டிய மானிடப்பண்புகள் மற்றும் விழுமியங்கள் தொடர்பான அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்.

- பல்வேறு பொருளாதார முறைகளின் பண்புகளையும் அவற்றின் முக்கியத்துவம் தொடர்பான அறிவையும், மனப்பாங்கையும் பரீட்சித்தல்.

- சட்டம் மற்றும் ஒழுங்கு, மோதல் முகாமைத்துவம், மனித உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பான அறிவு, திறன், மனப்பாங்கைப் பரீட்சித்தல்.

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2020
# 62 - குடியியற் கல்வி

**இரண்டாம் வினாப்பத்திரத்தின் நோக்கங்கள்**

- பாடத்தின் அனைத்து அலகுகளும் உள்ளடங்கும் வண்ணம் குறிப்பான விடயங்கள் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்

- சனநாயகமொன்றில் மோதல் ஏற்படுவதற்கான காரணங்கள் மற்றும் மோதல் தீர்வுக்காக பின்பற்றக்கூடிய வழிமுறைகள் தொடர்பில் ஒப்பீட்டு ரீதியான விளக்கத்தைப் பரீட்சித்தல்.

- பொருளாதார முறையொன்றில் உற்பத்திக் காரணிகள், உற்பத்தி மேற்கொள்ளப்படும் துறைகள் மற்றும் உற்பத்திப் பொருட்களின் இயல்புகள் தொடர்பான அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்.

- மனித உரிமைகள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் தொடர்பான அறிவையும், விளக்கத்தையும் மனப்பாங்கினையும் பரீட்சித்தல்.

- இலங்கையில் நடைமுறையில் உள்ள நீதித்துறை மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் , பகுத்தாராயும் அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்.

- அதிகாரப் பகிர்வு அல்லது அதிகாரப் பரவலாக்கத்தின் முக்கியத்துவம் மற்றும் நன்மை தீமைகள் தொடர்பில் உய்த்தறியும் அறிவைப் பரீட்சித்தல்.

- அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களில் காணப்படும் அதிகாரங்கள் கடமைகள், பொறுப்புக்கள் தொடர்பான அறிவு, விளக்கம் மனப்பாங்கைப் பரீட்சித்தல்.

- சூழல் பிரச்சினை மற்றும் நிலையான அபிவிருத்தித் தொடர்பில் அரசாங்கம் மற்றும் பிரஜைகளின் கடமைகள் மற்றும் மனப்பாங்குகள் தொடர்பில் பரீட்சித்தல்.

- சர்வதேச உறவுகள் ஏற்படுவதற்கான காரணிகள், முக்கியத்துவம் மற்றும் நன்மை தீமைகள் தொடர்பான அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்.

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

62 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Ord. Level) Examination, 2020

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civic Education I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## குடியியற் கல்வி I

**கவனிக்க :**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** ஜி.டி.எச். கோல்வின் வரைவிலக்கணப்படி வெளித் தடைகளற்ற விதத்தில் மனிதன் தனது தனித்துவத்தை விருத்தி செய்வதற்கான நிலைமையைக் குறிப்பிடுவது
(1) உரிமைகள் ஆகும். (2) சமத்துவம் ஆகும்.
(3) சுதந்திரம் ஆகும். (4) நீதி ஆகும்.

**2.** மோதலைத் தீர்க்கும் நோக்குடன் தரப்பினரின் விருப்பிற்கேற்பத் தீர்மானங்களை செயற்படுத்துதலைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் எண்ணக்கரு யாது?
(1) காப்பாற்றுதல் (2) பேரம் பேசுதல்
(3) மத்தியஸ்தம் வகித்தல் (4) தலையிடுதல்

**3.** சமூகமொன்றில் பல்வேறு பண்பாடுகளுக்குரிய மக்கள் குழுக்கள் ஒற்றுமையாக வாழும் சமூகமானது
(1) பன்மதச் சமூகம் எனப்படும் (2) பன்மைப் பண்பாட்டுச் சமூகம் எனப்படும்
(3) பல்லினச் சமூகம் எனப்படும் (4) பல்தேசிய சமூகம் எனப்படும்

**4.** மக்கள் பிரதிநிதிகள் மூலம் நாட்டின் ஆட்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது
(1) நேரடி ஜனநாயகமாகும் (2) மறைமுக ஜனநாயகமாகும்
(3) மக்கள் ஜனநாயகமாகும் (4) பிரசைகள் ஜனநாயகமாகும்

**5.** இலங்கையின் மீயுயர் சட்டமாவது,
(1) சிவில் சட்டமாகும் (2) மனித உரிமைச் சட்டமாகும்
(3) அரசியலமைப்புச் சட்டமாகும் (4) குற்றவியல் சட்டமாகும்

**6.** முயற்சியாண்மை எனும் உற்பத்திக் காரணிக்காக செலுத்தப்படும் கொடுப்பனவு யாது?
(1) ஊதியம் (2) வாடகை (3) வட்டி (4) இலாபம்

**7.** பின்வருவனவற்றுள் அமைதியான முறையில் ஒன்றுகூடும் உரிமை உள்ளடங்கியுள்ள மனித உரிமை எது?
(1) சமய உரிமைகள் (2) கலாசார உரிமைகள்
(3) அரசியல் உரிமைகள் (4) பொருளாதார உரிமைகள்



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**8.** உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் இரண்டு முக்கிய நுட்பமுறைகள்
(1) முதலீட்டு நுட்பமும் உழைப்பு நுட்பமும்
(2) அரசு நுட்பமும் தனியார் நுட்பமும்
(3) தொழினுட்ப நுட்பமும் முதலீட்டு நுட்பமும்
(4) நுகர்வு நுட்பமும் வர்த்தக நுட்பமும்

**9.** சனநாயக சமூகத்தில் பிரசைகளால் நிறைவேற்றப்பட வேண்டிய சட்டரீதியான கடமை
(1) மரபுகளுக்கு மதிப்பளித்தல் (2) வழக்காறுகளுக்கேற்ற நடத்தை
(3) சமயநெறிக்கேற்பச் செயற்படுதல் (4) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்

**10.** மனிதனின் நிலைத்திருப்புக்கு சூழலிலிருந்து கிடைக்கும் சேவைகள்
(1) சமூகச் சூழலைப் பாதுகாக்கும் சேவைகள்
(2) கழிவுகள் உறிஞ்சல் சேவைகள்
(3) இயற்கை அனர்த்தங்களை முகாமைத்துவம் செய்யும் சேவைகள்
(4) பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சேவைகள்

**11.** தனிநபருக்குள்ளும் நபர்களுக்கிடையிலும் ஏற்படும் மோதலைக் குறிப்பது
(1) தனியாள் மோதல் (2) சமூக மோதல்
(3) நுண்மையான மோதல் (4) குடும்ப மோதல்

**12.** பின்வருவோரில் சட்டமா அதிபரின் பணிகளுக்கு உதவும் அதிகாரி யார்?
(1) பொலிஸ்மா அதிபர் (2) பிரதம நீதியரசர்
(3) நீதியமைச்சர் (4) சொலிசிட்டர் ஜெனரல்

**13.** இலங்கையில் நடைமுறையிலுள்ள மாநகர சபையின் பிரதானி,
(1) நகரபிதா (2) பிரதம செயலாளர் (3) தலைவர் (4) ஆணையாளர்

**14.** மாகாண சபையொன்றின் முதலமைச்சரை நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டவர்
(1) ஜனாதிபதி (2) ஆளுநர்
(3) கட்சித் தலைவர் (4) தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர்

**15.** ஆரம்ப நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்யத்தக்க உயர்ந்த நீதிமன்றம் எது?
(1) மேன்முறையீட்டு நீதிமன்றம் (2) உயர் நீதிமன்றம்
(3) மாவட்ட நீதிமன்றம் (4) மாகாண மேல் நீதிமன்றம்

**16.** பன்மைப் பண்பாட்டுச் சமூகமாக இலங்கை உருவாகுவதில் பங்களிப்புச் செய்த புவியியற் காரணி,
(1) தெற்காசிய நாடாக இருத்தல்
(2) இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருத்தல்
(3) சுற்றுலாப் பயணிகளுக்கேற்ற கடற்கரையைக் கொண்டிருத்தல்
(4) திருகோணமலையில் இயற்கைத் துறைமுகம் அமைந்திருந்தல்

**17.** இயற்கைக் காரணிகளால் புவியில் ஏற்படும் சூழல் பிரச்சினைகளை மட்டும் கொண்டுள்ள விடையினைத் தெரிவுசெய்க.
(1) புவியதிர்வு, வறட்சி, எரிமலை (2) நிலச்சரிவு, ரொனாடோ, வளிமாசடைதல்
(3) புவியதிர்வு, வெள்ளப்பெருக்கு, நீர்மாசடைதல் (4) சூறாவளி, காடழிப்பு, காட்டுத்தீ

**18.** சனநாயக ஆட்சிமுறை நடைமுறையிலுள்ள நவீன அரசுகள் முயற்சிப்பது,
(1) தொடர்பாடல் சேவைகளை இணைப்பதற்கு
(2) சனநாயக கோட்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு
(3) உலகமயமாக்கத்தின் நோக்கங்களை நிலைநாட்டுவதற்கு
(4) பண்பாட்டுப் பல்வகைமையில் நாட்டைக் கட்டியெழுப்புதற்கு

**19.** இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து ஐக்கிய அமெரிக்க அரசுகள் உருவாக்கிய அமைப்பு எது?
(1) பிம்ஸ்டெக் (BIMSTEC) (2) ஆசியான் (ASEAN)
(3) நேட்டோ (NATO) (4) யுனெஸ்கோ (UNESCO)

**20.** இலங்கையில் 30 ஆண்டுகளாக நிலவிய இன மோதல் எவ்வகை மோதலுக்குரியது?
(1) தனிநபர் மோதல் (2) சமூக மோதல் (3) சமய மோதல் (4) பொருளாதார மோதல்

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**21.** ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிலுள்ள நாடுகளில் இரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடிய நிரந்தர உறுப்புரிமையைக் கொண்டுள்ள நாடு எது?
(1) பிரான்ஸ் (2) கனடா (3) யப்பான் (4) ஜேர்மனி

**22.** கிரேக்க நகர அரசின் பிரதான ஆட்சி நிறுவனத்தின் பெயர் யாது?
(1) செனற் சபை (2) நிறைவேற்றுச்சபை (3) மக்கள் மன்றம் (4) ஆட்சி சபை

**23.** அரசொன்றின் இறைமையதிகாரம் தங்கியிருப்பது,
(1) நிறைவேற்றுத்துறையிடம் (2) பாராளுமன்றத்திடம்
(3) நீதிமன்றத்திடம் (4) பொதுமக்களிடம்

**24.** சர்வதேச உறவுகள் மேற்கொள்ளப்படும் பிரதான முறைகள் அடங்கிய விடை
(1) கலாசார உபாய உறவுகள் (2) யுத்த உபாய உறவுகள்
(3) அரசியல் உபாய உறவுகள் (4) சமய உபாய உறவுகள்


**25.** 1978 அரசியல் யாப்பில் முதற்றடவையாக இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட முக்கிய அம்சம்,
(1) ஆளுநர் நாயகம் பதவி (2) சட்டவாக்க கழகம்
(3) தேர்தல் ஆணைக்குழு (4) நிறைவேற்று ஜனாதிபதி முறைமை

**26.** 1978 அரசியல் யாப்பின் 13 ஆவது சீர்திருத்தத்தின்படி தயாரிக்கப்பட்ட நிரல் பட்டியலுக்கமைய மத்திய அரசுக்குரிய அதிகாரம் யாது?
(1) தேசிய வீடமைப்பும் நிர்மாணமும் (2) சனத்தொகை மற்றும் புள்ளிவிபரங்கள்
(3) சமூக சேவைகளும் புனர்வாழ்வும் (4) விவசாயமும் கமநல சேவையும்

**27.** மனித அபிவிருத்திச் சுட்டியைக் கணிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் கூறுகள் அடங்கிய விடையைத் தெரிவுசெய்க.
(1) கொள்வனவு சக்தியை அடிப்படையாகக் கொண்ட தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தி, கல்வி, பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு
(2) கொள்வனவு சக்தியை அடிப்படையாகக் கொண்ட தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தி, பிரசவத் தாய் மரண வீதம், மொத்த தேசிய உற்பத்தி
(3) கொள்வனவு சக்தியை அடிப்படையாகக் கொண்ட தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தி, சிசு மரணவீதம், தேறிய மொத்தத் தேசிய உற்பத்தி
(4) கொள்வனவு சக்தியை அடிப்படையாகக் கொண்ட தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தி, வெளிநாட்டுக் கடன் வீதம், வயது வந்தோர் எழுத்தறிவு

**28.** தற்கால உலகின் பண்பாட்டுக் கலப்பிற்கு ஏதுவாயுள்ள முக்கிய காரணம் யாது?
(1) நாடுகளின் புவியியல் அமைவிடம் (2) வர்த்தகத் தொடர்புகள் விரிவடைதல்
(3) மேற்கு நாடுகளுக்கு அடிமையாகுதல் (4) உலகக் கிராமமாக மாற்றமுறல்

**29.** கல்டுனின் மோதல் முக்கோண மாதிரி கீழே தரப்பட்டுள்ளது.




இங்கு A, B, C என்பவற்றை ஒழுங்குமுறையில் காட்டியுள்ள தெரிவு எது?
(1) நடத்தை, மனப்பாங்கு, நம்பிக்கை (2) நடத்தை, சூழ்நிலை, மனப்பாங்கு
(3) மனப்பாங்கு, சூழ்நிலை, வழமை (4) சூழ்நிலை, சூழல், தொடர்பு

**30.** குறித்த வயதெல்லையைத் தாண்டியுள்ள மக்களுக்கு ஆட்சியாளரைத் தெரிவுசெய்வதற்குள்ள உரிமையைக் குறிப்பிடுவது,
(1) சர்வசன வாக்குரிமை (2) சுயாதீன வாக்குரிமை
(3) விகிதாசார வாக்குரிமை (4) பிரதிநிதித்துவ வாக்குரிமை

**31.** ஐக்கிய அமெரிக்கா அரசின் செனெற் சபைக்கு பிரதிநிதிகள் நியமிக்கப்படுவது
(1) ஜனாதிபதியால் (2) சமஷ்டி நீதிமன்றத்தால்
(3) மாநில அரசாங்கத்தால் (4) காங்கிரஸ் சபையினால்

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**32.** பின்வரும் கூற்றுக்களில் தொழிலாளர் உரிமை **அல்லாததைத்** தெரிவுசெய்க.
(1) நிறுவனத்தின் நோக்கங்களுக்கேற்ப வேலை செய்தல்
(2) எட்டு மணித்தியால வேலை நேரத்திற்குள் வேலை செய்தல்
(3) விடுமுறையைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை
(4) தொழில் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளல்

**33.** சமஷ்டி அரசியலமைப்பு நிலவும் நாடு,
(1) பெரிய பிரித்தானியா (2) இலங்கை
(3) ரஷ்யா (4) சுவிற்சர்லாந்து

**34.** சனநாயக ஆட்சிமுறையின் வெற்றிக்கு அவசியமான காரணி
(1) சட்டத்தின் ஆட்சி நிலவுதல் (2) மக்களின் பிரச்சினைகளை முன்வைக்கும் இயலுமை
(3) வறுமையை ஒழித்தல் (4) வெளிநாட்டுத் தொடர்புகளைப் பேணல்

**35.** பின்வருவனவற்றுள் வாக்காளர் எந்தவொரு அச்சுறுத்தலுமின்றி தமது அரசியல் கருத்தை தேர்தலில் பிரதிபலிப்பதற்கு இடமளித்தல் எவ்வகைத் தேர்தல் முறையின் அடிப்படைப் பண்பாகும்?
(1) அமைதியான தேர்தல் (2) சுதந்திரமான தேர்தல்
(3) தேசிய தேர்தல் (4) மக்கள் சார்ந்த தேர்தல்

**36.** இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொதுச்சுகாதார சேவை
(1) பொதுக் குளியலறைகளை பராமரித்தல்
(2) சுத்திகரிப்புப் பணிகளுக்கு குழாய்கள் பொருத்துதல்
(3) விளையாட்டு மைதானங்களைப் பராமரித்தல்
(4) மக்களின் பொதுச் சுகாதார வசதிகளை மேம்படுத்தல்

**37.** இலங்கையில் அரசியல்யாப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மனித உரிமைகளை விவரிக்கும் எண்ணக்கரு யாது?
(1) சமூக உரிமைகள் (2) மக்கள் உரிமைகள்
(3) அடிப்படை உரிமைகள் (4) குடியியல் உரிமைகள்

**38.** உலகமயமாக்கலினால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பாதகமான தாக்கத்தைத் தெரிவுசெய்க.
(1) மூளைசாலிகளின் வெளியேற்றம் துரிதமடைதல்
(2) பொருளாதாரம் பன்முகப்படுத்தப்படல்
(3) சென்மதி நிலுவை சாதகமாக அமைதல்
(4) நவீன தொழினுட்பம் உட்புகுதல்

**39.** பின்வரும் 'அ' நிரலில் பல்வேறு பொருளாதார முறைகளின் பண்புகளும் 'ஆ' நிரலில் அதற்கான பொருளாதார முறைகளும் தரப்பட்டுள்ளன.

| 'அ' – பொருளாதார முறையின் பண்புகள் | 'ஆ' – பொருளாதார முறைகள் |
|---|---|
| 1. போட்டித் தன்மை வாய்ந்த சந்தை நிலவுதல் | A - சமவுடைமை பொருளாதார முறை |
| 2. அரச சொத்துடைமை நிலவுதல் | B - நவலிபரல் வாத பொருளாதார முறை |
| 3. பொது நலன்புரிப் பணிகளில் அரசு தலையிடல் | C - கலப்புப் பொருளாதார முறை |
| 4. அரச நிறுவனங்களைத் தனியார் மயமாக்கல் | D - முதலாளித்துவ பொருளாதார முறை |

மேற்படி 'அ' நிரலை 'ஆ' நிரலுடன் சரியாகப் பொருத்தும் போது சரியான வரிசையொழுங்கைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) CADB (2) CDAB (3) DABC (4) DACB

**40.** பின்வரும் 'A', 'B' என்னும் கூற்றுக்களைக் கருத்திற் கொள்க.
A - நல்லாட்சியின் மூலம் ஊழலும் மோசடியும் இல்லாத பொது நிர்வாகம் ஏற்படும்.
B - அனைத்து ஜனநாயக அரசுகளிலும் ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
மேற்படி கூற்றுக்களில்
(1) கூற்று A இன் மூலம் B விளக்கப்படுகிறது
(2) A, B என்ற இரண்டு கூற்றுகளும் உண்மையாகும்
(3) கூற்று A பொய்யானதும் B உண்மையானதாகும்
(4) கூற்று A உண்மையானதும் B பொய்யானதாகும்

* *

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2020
## க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2020

විෂය අංකය / பாட இலக்கம்: **62** විෂයය / பாடம்: **குடியியற் கல்வி**

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 3 | 21. | 1 | 31. | 3 |
| 02. | 1 | 12. | 4 | 22. | 3 | 32. | 1 |
| 03. | 2 | 13. | 1 | 23. | 4 | 33. | 4 |
| 04. | 2 | 14. | 2 | 24. | 2 | 34. | 1 |
| 05. | 3 | 15. | 4 | 25. | 4 | 35. | 2 |
| 06. | 4 | 16. | 2 | 26. | 2 | 36. | 4 |
| 07. | 3 | 17. | 1 | 27. | 1 | 37. | 3 |
| 08. | 1 | 18. | 4 | 28. | 4 | 38. | 1 |
| 09. | 4 | 19. | 3 | 29. | 2 | 39. | 4 |
| 10. | 2 | 20. | 2 | 30. | 1 | 40. | 4 |

Department of Examinations - Sri Lanka

**විශේෂ උපදෙස්** / விசேட அறிவுறுத்தல் } **එක් පිළිතුරකට ලකුණු** / ஒரு சரியான விடைக்கு **01** **බැගින්** / புள்ளி வீதம்

**මුළු ලකුණු** / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு விடைப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

**නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව** / சரியான விடைகளின் தொகை: **25 / 40**

**I පත්‍රයේ මුළු ලකුණු** / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: **25 / 40**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## II பத்திரத்திற்கான வினாக்களும் விடைகளும்

**1.** (i) மாகாண சபையின் ஆளுநருக்குரித்தான **இரண்டு** அதிகாரங்களையும் பணிகளையும் குறிப்பிடுக.

(ii) எந்தவொரு பொருளாதாரமும் எதிர்நோக்கும் **இரண்டு** அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

(iii) ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் அடிப்படை நியதிகள் **இரண்டைத்** தருக.

(iv) வளங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக உலகில் தற்போது கைக்கொள்ளப்படும் வழிமுறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(v) இலங்கையில் பொதுச்சட்டத்திற்கு மேலதிகமாக அவதானிக்கக்கூடிய விசேட சட்ட வகைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(vi) சார்க் அங்கத்துவ நாடுகளிடையே செய்துகொள்ளப்பட்டுள்ள **இரண்டு** வர்த்தக உடன்படிக்கைகளின் பெயரைத் தருக.

(vii) பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களின் உறுப்பினர்கள் ஒற்றுமையாகச் செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(viii) கட்சி முறைமையில் காணக்கூடிய **இரண்டு** வகைகளைக் குறிப்பிடுக.

(ix) இணக்கப்பாட்டின் மூலம் மோதலைத் தீர்க்கக்கூடிய சந்தர்ப்பங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(x) இலங்கையில் மத்திய அரசாங்கத்தின் கட்டமைப்பில் அடங்கியுள்ள துறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(02 × 10 = 20 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka

i. – மாகாண சபையைக் கூட்டுதல், தவணைகளை முடிவுறுத்தல், கலைத்தல்

– மாாண சபையில் உரையாற்றுதல் செய்திகளை அனுப்பல்

– முதலமைச்சரை நியமித்தல்

– அமைச்சரவை மற்றும் ஏனைய அதிகாரிகளை நியமித்தல்

– மாகாண சபையின் கொள்கைகளை அனுமதித்தல்

– அவசரகால நிலைமைகளின்போது ஜனாதிபதியின் ஆலோசனையின்படி செயற்படுதல்

– மத்திய அரசுக்கும் மாகாணசபைக்குமான இணைப்பாளராக செயற்படல்

– மாகாண சபையின் பெயரளவு நிருவாகியாக மாகாண முதலமைச்சரின் ஆலோசனையின்படி செயற்படல்.

– பிரித்து எழுதப்பட்டவற்றையும் கருத்திற்கொள்ளவும் .

**(மேற்கூறப்பட்டவற்றுள் எவையேனும் இரண்டிற்கு புள்ளிகளை வழங்கவும்)**

**( 02 புள்ளிகள் )**

ii. – எதனை எந்தளவிற்கு உற்பத்தி செய்வது?

– எவ்வாறு உற்பத்தி செய்வது?

– யாருக்காக உற்பத்தி செய்வது?

**(மேற்படி மூன்றில் எவையேனும் இரண்டிற்கு புள்ளிகளை வழங்கவும்)**

**( 02 புள்ளிகள் )**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

iii. - சிறுவர் பாதுகாப்பு
- பங்கு கொள்ளல்
- விருத்தி
- உயிர் வாழ்தல்
- பாகுபாடற்ற தன்மை

**(மேற்கூறப்பட்டவற்றுள் எவையேனும் இரண்டிற்கு புள்ளிகளை வழங்கவும்)**

**( 02 புள்ளிகள் )**

iv.

| | | |
|---|---|---|
| 5S | – | வினைத்திறன் எண்ணக்கரு பயன்பாடு |
| CP | – | தூய்மையான உற்பத்தி |
| GP | – | பசுமை உற்பத்திகள் |
| TQM | – | முழுமைத்தர முகாமைத்துவம் |
| Poka yoke | – | தவறுகளைப் பூச்சியமாக்கல் |
| PPP | – | கழிவகற்றும் பொறுப்பை உற்பத்தியாளர் ஏற்றுக் கொள்ளல் |

**(மேற்கூறப்பட்டவற்றுள் எவையேனும் இரண்டிற்கு புள்ளிகளை வழங்கவும்)**
**(தமிழ் அல்லது ஆங்கில எழுத்துக்கள் ஆகியவற்றுள் ஒன்று எழுதப்பட்டிருத்தல் போதுமானது)**

**( 02 புள்ளிகள் )**

v. - கண்டியர் சட்டம்
- தேசவழமைச் சட்டம்
- இஸ்லாமியச் சட்டம்

**(மேற்கூறப்பட்டவற்றுள் எவையேனும் இரண்டிற்கு புள்ளிகளை வழங்கவும்)**

**( 02 புள்ளிகள் )**

vi. - SAPTA - தென்னாசிய நாடுகளது வர்த்தக ஒப்பந்தம்
- SAFTA - தென்னாசிய நாடுகளது சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

**(மேற்படி ஒப்பந்தங்கள் இரண்டை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் சுருக்கப் பெயரில் குறிப்பிட்டிருந்தால் புள்ளி வழங்கவும்)**

**( 02 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

vii.- தேசிய ஐக்கியம் மற்றும் சகவாழ்வு நிலை விருத்தியடைகிறது

- முரண்பாடுகள் தீர்க்கப்படுகின்றன
- அந்நியோன்ய தொடர்பும் நம்பிக்கையும் விருத்தியடைகின்றது
- ஒரே தேசம் ஒரே நாடு எனும் உணர்வு விருத்தியடைகின்றது
- மனித சுதந்திரமும் ஜனநாயகமும் உறுதிப்படுத்தப்படுகின்றது
- நாட்டின் அபிவிருத்திக்காக சகல பிரசைகளும் ஒன்று சேர்ந்து செயற்படல்
- தேசிய கடப்பாடாக எண்ணிச் செயற்படுகின்ற நிலை உருவாகின்றது
- பிற சமயங்களுக்கும் பண்பாடுகளுக்கும் கலாசாரங்களுக்கும் அகௌரவம் ஏற்படாத விதத்தில் செயற்படும் நிலை வளர்ச்சி அடைகின்றது.

**(மேற்கூறப்பட்டவற்றையோ அல்லது அதற்குச் சமமான வேறு விடைகளையோ எழுதியிருப்பின் புள்ளிகளை வழங்கவும்)**

**( 02 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka

viii.- ஒரு கட்சி

- இரு கட்சி
- பல கட்சி

**(மேற்கூறப்பட்டவற்றுள் எவையேனும் இரண்டிற்கு இரண்டு புள்ளிகளை வழங்கவும்)**

**( 02 புள்ளிகள் )**

ix. - குடும்ப பிரச்சினை

- தொழிலாளர் பிரச்சினை
- குழுக்களிடையான பிரச்சினை
- பொதுச் சொத்துக்கள் தொடர்பான பிரச்சினை
- சிறு குற்றங்கள் தொடர்பான பிரச்சினை

**(மேற்கூறப்பட்டவற்றுள் எவையேனும் இரண்டிற்கு இரண்டு புள்ளிகளை வழங்கவும்)**

**( 02 புள்ளிகள் )**

x. - சட்டத் துறை

நிறைவேற்றுத் துறை

நீதித் துறை

நிறைவேற்றுத் துறைக்குப் பதிலாக ஜனாதிபதி எனவும், சட்டத்துறைகுப் பதிலாக பாராளுமன்றம் எனவும் எழுதப்பட்டிருப்பின் புள்ளிகளை வழங்கவும்.

**( 02 புள்ளிகள் )**

**(மொத்தம் 02 x 10 = 20 புள்ளிகள்)**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

| | | |
|---|---|---|
| **2.** | சமகால உலகில் அநேகமான அரசுகள் தேசிய அரசுகளாகக் கருதப்படுகின்றன. | |
| (i) | அரசின் பிரதான வகைகள் **இரண்டைக்** குறிப்பிடுக. | (02 புள்ளிகள்) |
| (ii) | தேசிய அரசு ஒன்றின் பிரதான பண்புகள் **மூன்றை** எழுதுக. | (03 புள்ளிகள்) |
| (iii) (a) | இலங்கையில் நடைமுறையிலுள்ள **மூன்று** வகை உள்ளூராட்சி மன்றங்களின் பெயர் தருக. | (03 புள்ளிகள்) |
| (b) | அவற்றுள் **ஒன்றின்** பணிகளைச் சுருக்கமாக விளக்குக. | (02 புள்ளிகள்) |

i. ஒற்றையாட்சி, கூட்டாட்சி (சமஸ்டி ஆட்சி)

**(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் வழங்குக.)**

**( 02 புள்ளிகள் )**

ii. - ஓர் இனத்திற்கு ஓர் அரசு என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருத்தல்
- நிலம், மக்கள் தொகை, அரசாங்கம், இறைமை ஆகிய மூலக்கூறுகளைக் கொண்டிருத்தல்
- தொழில் ரீதியாக உயர் வகுப்பினரைக் கொண்டு ஆட்சி நடாத்தப்படல்.
- உள், வெளி இறைமையைக் கொண்டிருத்தல்

**(மேற்கூறப்பட்டவாறு விடை எழுதியிருப்பின் ஒரு விடயத்திற்கு 1 புள்ளி வீதம் 03 புள்ளிகளை வழங்குக.)**

**( 03 புள்ளிகள் )**

iii. a) மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை

**(மேற்படி நிறுவனங்களை எழுதியிருப்பின் 03 புள்ளிகளை வழங்குக.)**

**( 03 புள்ளிகள் )**

b) இவற்றின்மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

- உதாரணம் : கழிவகற்றல், பொதுச் சுகாதாரம், சேவைகளைக் கொண்டு நடாத்துதல், வீதிகளைப் பராமரித்தல் போன்ற விடைகளை எழுதியிருக்கக் கூடும்.

- பொருத்தமான நிறுவனத்தைப் பெயரிட்டு அதன் பணிகளைச் சுருக்கமாக விபரித்திருப்பின் 02 புள்ளிகளை வழங்கவும்.

**(பணியை மட்டும் எழுதியிருப்பின் 01 புள்ளி வழங்கவும்)**

**( 02 புள்ளிகள் )**

**(மொத்தம் 03 + 02 = 05 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**3.** அபிவிருத்திச் செயன்முறையின்போது சூழலியல் பாதிப்புக்கள் குறித்து அதிக கரிசனை கொள்ளல் பிரசைகளின் பொறுப்பாகும்.

(i) நிலையான அபிவிருத்தியை அடைவதில் சூழல் அபிவிருத்தி தொடர்பாக எதிர்நோக்க வேண்டிய சவால்கள் **இரண்டை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) உலகில் இடம்பெறும் காடழிப்பினால் ஏற்பட்டுள்ள விரும்பத்தகாத விளைவுகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) காடழிப்பைக் குறைப்பதற்காக மாணவரென்ற வகையில் உங்களால் எடுக்கக்கூடிய வழிமுறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(b) அவற்றுள் **ஒன்றினை** நடைமுறைப்படுத்தக்கூடிய விதத்தை விளக்குக. (02 புள்ளிகள்)

i. – சூழல் நேயத்துடன் வளங்களைக் கையாளுதல்

– புவியினால் தாங்கிக் கொள்ளக்கூடிய அபிவிருத்தி

– அழகியல் சார் அம்சங்களைப் பாதுகாத்தல்

**(இவை போன்ற சூழலுடன் இணைந்த பொருத்தமான விடைகளை எழுதியிருப்பின் புள்ளிகளை வழங்கவும்)**

**( 02 புள்ளிகள் )**

ii. – வளிக் கோளத்தில் ஒட்சிசன் வழங்கலுக்குத் தடை ஏற்படும்

– காபனீரொட்சைட்டினை உறிஞ்சும் ஆற்றல் குறைவடைதல்

– நீர் மட்டம் குறைவடைதல்

– மண்ணின் ஈரப்பதம் குறைவடைதல்

– வெள்ளப் பெருக்கும் நிலச்சரிவும் அதிகரித்தல்

– மண்ணின் பௌதிக இயல்புகள் குன்றி மண் வளமற்றுப் போதல்

– உயிரிகளுக்கு வாழிடம் அற்றுப்போதல்

– சுற்றாடலின் அழகு குறைதல்

– பலகை, உணவு மற்றும் ஔடத வளங்கள் வரையறைக்குட்படுதல்

– மண்ணரிப்பு அதிகரித்தல்

– உயிர்ப்பல்வகைமை அழிவுறல்

– நீர் வட்டத்தின் செயற்பாட்டிற்கு தடங்கலேற்படுதல்

– நிலக் கீழ் நீரின் அளவு குறைதல்

– பாலைவனமாதல்

– புவி வெப்பமடைதல்

**(மேற்கூறப்பட்டவற்றுள் எவையேனும் மூன்றினை எழுதி இருப்பின் புள்ளி வழங்கவும்.)**

**( 03 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

iii. a)
- பல்வேறு செயற்பாடுகள் மூலம் மக்களைத் தெளிவுபடுத்தல்
- காடுகளை வளர்த்தல்
- பலகைக்குப் பதிலாக வேறு மூலப் பொருட்களைப் பயன்படுத்தல்
- வீட்டில் பயன்தரும் பயிர்களை வளர்த்தல்
- பாடசாலைத் தோட்டத்தில் மரங்களை நடுதல்
- காடுகளுக்குத் தீ வைப்பதை தவிர்த்தல்
- வனப் பாதுகாப்புச் சட்டங்கள் தொடர்பில் தான் அறிவூட்டம் பெறுவதுடன் ஏனையோரையும் அறிவூட்டல்
- காடு வளர்ப்பிற்குப் பங்களிப்புச் செய்தல் தொடர்பில் உரிய தரப்பினரை அறிவூட்டுதல்

**(இவை போன்ற பொருத்தமான விடைகளை எழுதியிருப்பின் 03 புள்ளிகளை வழங்குக.)**

**( 03 புள்ளிகள் )**

b) இதனை நடைமுறைப்படுத்தும் விதத்தை உதாரணத்துடன் விளக்கி இருத்தல் வேண்டும்.

**(விளக்கத்திற்கு 02 புள்ளிகளை வழங்கவும்)**

**( 02 புள்ளிகள் )**

**(மொத்தம் 03 + 02 = 05 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**4.** மோதல் தவிர்க்க முடியாததொன்றோ அன்றேல் கட்டாயமாக ஏற்படுவதோ அன்று. மாறாக மோதல் தவிர்க்கக்கூடியதாகும்.

(i) மோதலுக்குட்படக்கூடிய **இரண்டு** தரப்புகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மோதல் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) மோதலைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்வதால் ஏற்படும் **மூன்று** நன்மைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(b) அவற்றுள் ஏதேனும் **ஒன்றினால்** சமூகத்தில் ஏற்படும் பயன்களை விவரிக்க. (02 புள்ளிகள்)

i. – ஆளக மோதல்
- தனியாள் மோதல்
- இரண்டு நபர்களுக்கிடையிலான மோதல்
- குழுக்களுக்கிடையேயான மோதல்
- நாடுகளுக்கிடையேயான மோதல்
- மக்களுக்கிடையேயான மோதல்

**(இதற்கு மேலதிகமாக சமயக் குழுக்கள், இனக் குழுக்கள் மோதல் பற்றியும் கருத்திற் கொள்க)**

**(மேற்கூறப்பட்டவையை ஒத்த 2 விடயங்களுக்கு 02 புள்ளிகளை வழங்குக.)**

**( 02 புள்ளிகள் )**

ii. – இனப்பாகுபாடு
- அரசியல் கருத்து முரண்பாடு
- சமூக பொருளாதாரம்
- சமயக் கருத்து

**(மேற்கூறப்பட்டவற்றுள் 3 விடயங்களுக்கு 03 புள்ளிகளை வழங்கவும்.)**

**( 03 புள்ளிகள் )**

iii. a) – உயிராபத்தைத் தடுத்தல்
- சொத்துக்களுக்கான ஆபத்தைத் தடுத்தல்
- அடிப்படை மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல்
- உளப் பதகளிப்பைக் குறைத்தல்
- தனிநபர் உளப்பண்பு மேன்மையுறல்
- சுய கௌரவம் பாதுகாக்கப்படும்
- சமாதானம் பேணப்படும்

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- அரசியல் உறுதிப்பாடு
- பொருளாதார உறுதிப்பாடு
- இன ஐக்கியம் ஏற்படல்
- நாடு செழிப்படைதல்
- சூழலைப் பாதுகாத்தல்

**(மேற்கூறப்பட்டவற்றுள் 3 எழுதியிருப்பின் 03 புள்ளிகளை வழங்கவும்.)**

**( 03 புள்ளிகள் )**

b) மேற்கூறப்பட்டவற்றுள் ஒன்றினால் சமூகத்திற்கு ஏற்படும் பயன்களை விளக்கி இருத்தல் வேண்டும்.

**( 02 புள்ளிகள் )**

**(மொத்தம் 03 + 02 = 05 புள்ளிகள்)**

**5.** சமூகத்தின் நன்னிலவுகையைப் பாதுகாப்பதற்காக அனைத்து பிரசைகளும் சட்டம் தொடர்பில் தெளிவூட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(i) தற்போது இலங்கையில் நடைமுறையிலுள்ள **இரண்டு** நீதிமன்றங்களைக் குறிப்பிடுக. (உயர்நீதிமன்றம் தவிர) (02 புள்ளிகள்)

(ii) உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) தாமதமின்றியும் பக்கச் சார்பின்றியும் சட்டத்தை நிலைநாட்டுதல் இடம்பெறாமையால் ஏற்படும் **மூன்று** தீமைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(b) அவற்றில் **ஒன்றை** விளக்குக. (02 புள்ளிகள்)

i. மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், ஆரம்ப நீதிமன்றம் (நீதவான் நீதிமன்றம்)

**(எவையேனும் இரண்டை எழுதியிருப்பின் 02 புள்ளிகளை வழங்குக.)**

**( 02 புள்ளிகள் )**

ii.
- அரசியல் யாப்புக்கு வியாக்கியானம் கூறுதல்
- அடிப்படை உரிமைகள் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்தல்
- ஆலோசனை வழங்கல்
- பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு
- பாராளுமன்ற வரப்பிரசாதங்கள்
- ஜனாதிபதித் தேர்தல் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரம்
- இறுதி மேன்முறையீட்டை விசாரணை செய்யும் அதிகாரம்
- விதிகளைத் தயாரிக்கும் நீதி அதிகாரம்

**(மேற்கூறப்பட்டவற்றுள் எவையேனும் மூன்றினை எழுதியிருப்பின் புள்ளிகளை வழங்குக.)**

**( 03 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

iii. a)
- தனி நபர்களுக்கிடையே நீதிமன்றத் தொகுதி மற்றும் சட்டம் பற்றிய நம்பிக்கையற்றுப் போதல்
- நீதிக்குப் பதிலாக அநீதி முன்னிலை பெறல்
- குற்றங்களும் ஊழல்களும் பெருகுதல்
- நாட்டின் சட்டத்தின் சமநிலையையும் நீதியையும் சீர் குலைத்தல்
- நீதியைப் பெற வேறு வழிகளை நாடுதல்
- நீதியைப் பெற நீண்ட காலமும் பாரிய செலவும் ஏற்படுதல்
- மனிதர்கள் மத்தியில் சட்டமும் நீதியும் மதிப்பிழந்து போதல்

**(இவைபோன்ற 3 விடையங்களை எழுதியிருப்பின் 03 புள்ளிகளை வழங்கவும்.)**

**( 03 புள்ளிகள் )**

b) இவற்றுள் ஒன்றை விவரித்திருத்தல் வேண்டும்.

**( 02 புள்ளிகள் )**

**(மொத்தம் 03 + 02 = 05 புள்ளிகள்)**

**6.** நபர்கள் வாழும் சமூகத்திற்கேற்பப் பண்பாட்டுப் பல்வகைமையை அவதானிக்கலாம்.

(i) இலங்கையைப் பன்மைப் பண்பாட்டுக்குச் சமூகமாக ஏற்றுக்கொள்வதற்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) நாட்டில் சமூக நீதி வீழ்ச்சியடைவதில் தாக்கம் செலுத்தும் **மூன்று** காரணங்களை எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) (a) நல்லாட்சியை சமூகத்தில் நிலைநாட்டுவதற்கு கருத்திற்கொள்ளவேண்டிய சமூக மற்றும் பண்பாட்டுக் காரணிகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(b) அவற்றுள் **ஒன்றை** நடைமுறைப்படுத்தும் விதத்தை விளக்குக. (02 புள்ளிகள்)

i.
- அமைவிடம்
- குடிப்பெயர்வு
- ஆக்கிரமிப்பு

  (உதாரணம்) சோழர் படையெடுப்பு
- வியாபாரம்
- தொழிலாளர் அழைத்து வரப்படல்

**(மேற்படி கருத்துக்களையோ அன்றேல் வேறு விடைகளையோ எழுதியிருப்பின் புள்ளிகளை வழங்கவும்)**

**( 02 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ii. - தேவையற்ற விதத்தில் அதிகாரத்தை மத்தியில் குவித்தல்

- வினைத்திறனற்ற பொது நிர்வாகம்
- பொது நிர்வாகத்தை அரசியல் மயப்படுத்தல்
- பணிக்குழுவினரின் வல்லாட்சி
- ஊழலும் லஞ்சமும் அதிகரித்தல்
- பொதுத்துறையினர் பொறுப்பற்றுச் செயற்படல்
- பொதுக் கொள்கையை உருவாக்கும் போதும் நடைமுறைப்படுத்தம்போது மக்கள் நலன்களில் கவனம் கொள்ளாமை
- தனியார் துறையினர் தேசிய நலன்களைக் கருத்திற் கொள்ளாமை
- இலாபம் உழைப்பதை அடிப்படை நோக்கமாகக் கொள்ளல்
- சர்வதேச அழுத்தங்கள்
- நீதித்துறை நிறுவனங்கள் போன்ற சுயாதீன நிறுவனங்கள் மீது குழுக்களும் நபர்களும் பிரயோகிக்கும் அழுத்தங்கள்.

**(இவை போன்ற 3 விடயங்களுக்கு 03 புள்ளிகளை வழங்கவும்.)**

**( 03 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka

iii. a)

- தாம் விரும்புகின்ற சமயத்தைப் பின்பற்றல்
- பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தல்
- பல்வேறு வைபவங்களை நடாத்துதல்
- தாம் விரும்பிய பிரதேசத்தில் வாழ்தல்
- பல்வேறு மொழிகளைக் கற்று அவற்றைப் பயன்படுத்தல்
- ஏனைய கலாசாரங்களை மதித்தல்
- பயணம் செய்வதற்கான சுதந்திரம்
- இன ஐக்கியம்

**(இவை போன்ற விடையங்களில் மூன்றை எழுதியிருப்பின் 03 புள்ளிகளை வழங்கவும்.)**

**( 03 புள்ளிகள் )**

b) விளக்கத்தில் முக்கியத்துவம், நடைமுறைப்படுத்தும் விதம் குறிப்பிடப்பட்டிருத்தல் போதுமானது.

**(இவற்றுள் ஒன்றை விவரித்திருப்பின் 02 புள்ளிகளை வழங்கவும்.)**

**( 02 புள்ளிகள் )**

**(மொத்தம் 03 + 02 = 05 புள்ளிகள்)**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**7.** மனித உரிமைகளோடு இணைந்த கடமைகளை நிறைவேற்றுதல் பிரசைகளின் பொறுப்பாகும்.

(i) மனித உரிமைகளை வென்றெடுப்பதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பங்கள் **இரண்டை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டு ஒப்பந்தம் (ICCPR) மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) பாடசாலையின் மாணவர் என்ற ரீதியில் உங்களுக்குரித்தான உரிமைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(b) அவற்றுள் **ஒன்றை** விவரிக்க. (02 புள்ளிகள்)

i.
- கி. பி 1215 – பிரித்தானிய மக்ன காட்டா உடன்படிக்கை.
- கி. பி 1689 – பிரித்தானிய மனித உரிமைகள் பற்றிய உடன்படிக்கை.
- கி. பி 1776 – அமெரிக்க சுதந்திரப் பிரகடனம்.
- கி. பி 1789 – மனிதன் மற்றும் பிரசைகள் உரிமைகள் தொடர்பான பிரான்சியப் பிரகடனம்.
- கி. பி 1917 இரஷ்யப் புரட்சி.

**(வருடத்தைக் குறிப்பிடுதல் கட்டாயம் இல்லை)**

**(மேற்கூறப்பட்டவற்றுள் எவையேனும் இரண்டைக் குறிப்பிட்டிருந்தால் 02 புள்ளிகளை வழங்குக.)**

**( 02 புள்ளிகள் )**

ii.
- வாழ்வதற்கான உரிமை
- நீதியற்ற முறையில் கைது செய்வதிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை
- சட்டத்தின் முன் மனிதனாக ஏற்றுக் கொள்வதற்கான உரிமை
- எதிர்காலத்தைப் பாதிக்கும் வகையில் வழங்கப்பட்டிருக்கும் தண்டனையிலிருந்த மீள்வதற்கான உரிமை
- தனிப்பட்ட சுதந்திரம், பாதுகாப்பிற்கான உரிமை
- நீதியான வழக்கு விசாரனைகளுக்கான உரிமை
- சமய வழிபாட்டிற்கான உரிமை
- அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான உரிமை
- தேர்தலின் போது வாக்களிக்கும் உரிமை
- பிரிநிதியாகத் தேர்தலில் போட்டியிடுவதற்கான உரிமை
- கொடூரமாகவும் மனிதத் தன்மையற்ற வகையிலும் அவமானப்படுத்தம் வகையிலும் நடாத்தப்படுவதிலிருந்தும் சித்திரவதைகளிலிருந்தம் விடுபட்டிருப்பதற்கான உரிமை.

**(இவற்றையோ அன்றேல் இவற்றுக்குச் சமமான மூன்று விடயங்களைக் குறிப்பிட்டிருப்பின் 03 புள்ளிகளை வழங்கவும்)**

**( 03 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

iii. a)
- கல்வி கற்பதற்கான உரிமை
- பிள்ளையாக வாழ்வதற்கான உரிமை
- கருத்து வெளியிடும் சுததந்திரம் மற்றும் உரிமை
- விளையாடுவதற்கும் பொழுதைக் கழிப்பதற்குமான உரிமை
- சுகாதாரம் மற்றும் போசாக்கு வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை
- தனித்துவம் மற்றும் சமத்துவமாக நடத்தப்படல்
- தமது சமயத்தை வழிபடும் உரிமை

**(இவை போன்ற பொருத்தமான விடைகளை எழுதியிருப்பின் 03 புள்ளிகளை வழங்கவும்.)**

**( 03 புள்ளிகள் )**

b) இவற்றுள் ஒன்றை விளக்கியிருத்தல் அவசியம்

**(02 புள்ளிகளை வழங்கவும்.)**

**( 02 புள்ளிகள் )**

**(மொத்தம் 03 + 02 = 05 புள்ளிகள்)**

ஜஜஜஜஜஜ


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/